திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆமூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணசாமி ரெட்டி என்பவரின் மகன் திரு. கண்ணியப்பன் என்பவர் 9–6–2018 அன்று அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் வேதனை அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, அன்னாரின் குடும்பத்திற்கு தற்போதைய நடைமுறைகளின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) நீட் தேர்வில் தோல்வியடைந்து தற்கொலை செய்து கொண்ட மாணவி சுபஸ்ரீ குடும்பத்திற்கு அரசின் சார்பில் நிதியுதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நிவாரணம் வழங்குவதில் என்ன இருக்கிறது?* (குறுக்கீடு) *சரி, சொல்லுங்கள்.*

முற்பகல் 11-55

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நிவாரணம் வழங்கப்படக்கூடிய அந்தப் பட்டியலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்திருக்கின்றார்கள். நான் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, ஏற்கெனவே, நீட் தேர்விலே தோல்வியடைந்து, மனமுடைந்து தற்கொலை செய்துகொண்ட அரியலூர் பகுதியைச் சேர்ந்த அனிதா என்ற அந்த மாணவிக்கு அரசின் சார்பிலே நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த பிரதிபா என்கிற அந்த மாணவிக்கும் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுபஸ்ரீ என்கிற மாணவி ஒரு வார காலத்திற்கு முன்பு, நீட் தேர்வில் தோல்வி அடைந்த காரணத்தினால், அவரும் மனமுடைந்து தற்கொலை செய்துகொண்டிருக்கிறார். ஆனால், அவருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில்*

2018 ஜுன் 14] [திரு. மு.க. ஸ்டாலின்]

எங்களுடைய மாவட்டச் செயலாளர், இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய முன்னாள் அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் நேரடியாகச் சென்று ஆறுதல் சொல்லிவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 2 இலட்சம் ரூபாய் நிதியை வழங்கிவிட்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அரசின் சார்பில் இன்னும் நிதி வழங்கப்படவில்லை என்ற அந்தச் செய்தியை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (குறுக்கீடு)

5. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

(ஆ) இயற்கைச் சீற்றம், விபத்துகள் மற்றும் மின்சாரத் தாக்குதல், தீ விபத்து ஆகியவற்றின் காரணமாக பல்வேறு தொகுதிகளில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?*

திரு. துரைமுருகன்: *நான் நன்றி சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றியா, சரி சொல்லுங்கள்.* (சிரிப்பு)

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரணம் குறித்து அறிவித்தார். அதற்காக நான் நன்றி சொல்கிறேன். ஆனால், இது ஏதோ சட்டமன்றம் நடைபெறுகின்றபோது, ஏற்படுகின்ற நிகழ்வுகளில் கவனத்திற்கு வந்ததற்கு மாத்திரம் நிவாரணம் வழங்குவதாகச் சொல்கிறீர்கள். எனவே, ஒரு* standing order *துறையின்மூலம் போட்டிருக்க வேண்டும். என்னென்ன வகையில் இறப்பு நேரிடுகிறதோ, அதற்கு ஏற்ப* Collector *மூலமாக விசாரித்து எவ்வளவு தொகை வழங்குவது என்பதற்கு ஒரு* standing order *கொடுத்துவிடுங்கள். அவ்வப்போது நாங்கள் கோரும் தொகையைக் கொடுக்க வேண்டிய தேவையில்லை. தொகையை நிர்ணயித்து நிரந்தரமாக உத்தரவு போட்டீர்களென்றால், நன்றாக இருக்கும் என்ற என்னுடைய யோசனையை தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து ஏற்கெனவே முதலமைச்சர். . .* (குறுக்கீடு) *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*